பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 07 சனிக்கிழமை 20.03.2021 கதிர் 03

## ம.ம.முன்னணியிலிருந்து அரவிந்குமார் எம்.பி. 'அவுட்'

மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்தும், அனைத்துப் பதவிகளில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் நீக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை கட்சியின் செயலாளர் நாயகம் சங்கரன் விஜயசந்திரன் உறுதிப்படுத்தினார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம்

2

# பசறையில் 200 அடி பள்ளத்தில் விழுந்தது பஸ்: 14 பேர் மரணம்!

## 46 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



பசறை பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட பசறை - லுணுகலை பிரதான வீதியின் மெத்தக்கடை பகுதியில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 46 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து இன்று காலை 6.55 மணியளவில் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை - லுணுகலையில் கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

2

## பசறை விபத்து குறித்து ஆராய செந்தில் தொண்டமான் பணிப்பு

### பாதிக்கப்பட்டோருக்கு உடன் உதவி

பசறையில் இன்று காலை இடம்பெற்ற கோர பஸ் விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு, முதல் கட்டமாக 15 ஆயிரம் ரூபாவை உடன் வழங்க, ஊவா மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான்

2

காணி, பொலிஸ் அதிகாரங்களுடன்

## மாகாண சபைத் தேர்தலை நடத்த இடமளிக்கமாட்டோம்

### இராஜாங்க அமைச்சர் விதுர திட்டவட்டம்

மாகாண சபைக்கான அதிகாரங்களை முழுமையாக நீக்கிய புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். காணி,பொலிஸ் அதிகாரங்களுடன்

2

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வு என டக்ளஸ் வாக்குறுதி



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குழு ஒன்றை அமைத்து ஒரு மாதத்துக்குள் தீர்வு

2

## காடழிப்புக்கு எதிராக செவ்வாய் கொழும்பில் பெரும் போராட்டம்!

### சஜித் அணியின் ஏற்பாட்டில்

காடழிப்புகளை நிறுத்துமாறும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக விசேட பொறிமுறையொன்றை உருவாக்குமாறு வலியுறுத்தியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

2

## தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரைக்கும் 30 கிலோ மீற்றர் நீந்தி சாதனை படைத்த பெண்!



இந்தியாவின் தலை சிறந்த நீச்சல் வீராங்கனையான சியாமளா கோலி, 30 கிலோ மீற்றர் தூரமான பாக்கு நீரிணையை நேற்று நீந்தி சாதனை படைத்தார்.

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர்

2

தொழினுட்பப் பிரிவு

விஸ்டம்

A/L 2023
2021 Day

பொறியியற் தொழினுட்பவியல்

K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)
R.சிவரூபன் NCECP , NCT (Electrical & Electronic)
R.நிரூஜன் B.Sc
M.சுதாகரன் NDT , B.Ed
P.கிருபாகரன் NDT (Const Tech)
P.கணேஸ் NDT Automobile , (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

P.விமலநாதன் B.Sc
R.நிரூஜன் B.Sc
A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
M.விஸ்ணுதேவன் B.Sc (Agri), PGDE
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்

P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்

S.ஶ்ரீகிருஸ்ணா BA (Hons) , PGDE (Merit)

கணிதம் (7)

S.தர்சன் B.Sc (Hons) , PGDE (Merit)
M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை

S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்

S.கருணாகரன் NDT , B.Ed

077 248 7774
076 552 9093

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

தீபம் கல்வி நிலையம்

யாழ் மாவட்டத்தில் தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

A/L 2023 கலை, வர்த்தகப்பிரிவு

வர்த்தகப்பிரிவு

- கணக்கீடு — K.பாலகஜன் M.com (Acc.Spl.)
- பொருளியல் — V.ஜெகதீஸ் BA (Hons) Eco. Spl.
- வணிகம் — S.K.பாலசுபேஷ் B.Com (HNDA)

கலைப்பிரிவு

- தமிழ் — இ.இ. வசீகரன் B.A.
- புவியியல் — K.T.ஜெராட் B.A. (Hons) Geo.Spl.
- அரசியல் — R. பாலகாந்தன்
- கிறிஸ்தவ நாகரீகம் — J.சரோன் B.A (Hons) Chri.Civil Spl.
- வரலாறு — K.கலைச்சந்திரன் B.A.(Hons), PGDE
- ICT — N.நிரோஜன் B.Sc in Computer Science

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்

A/L 2023 அனுமதிகள் வழங்கப்படுகின்றன

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

077 224 7781 நிர்வாகி

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500

## விபத்தில் பூசகர் படுகாயம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மோட்டார் சைக்கிளிலில் பயணித்த முதியவரை இராணுவத்தினரின் ட்ரக் வண்டி மோதியதிலில் படுகாயமடைந்த பூசகர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ் நகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவரை அதே திசையில் பயணித்த ட்ரக் வண்டியே பின்னால் சென்று மோதியது. இந்த விபத்தில் படுகாயமடைந்த பொன்னாலையைச் சேர்ந்த 75 வயதுடைய பூசகர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்றைய தினம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தலைமன்னாரிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீ.வீ.கே. சிவஞானம், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்து இந்தச் சாதனை முயற்சியை நேற்று மன்னாரில் ஆரம்பித்துவைத்தனர்.

சாதனையைப் புரிவதற்கு 13 மணித்தியாலங்களும் 40 நிமிடங்களையும் அவர் எடுத்துக்கொண்டார்.

நேற்று 19ஆம் திகதி மன்னாரிலிருந்து பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து இந்தியாவின் தனுஷ்கோடியை சென்றடையும் சாதனை முயற்சியை ஆரம்பித்த சியாமளா, 47 வயது நீச்சல் வீராங்கனையாவார்.

உலகளவில் வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் இரண்டாவது பெண் மணியாகவும், 13 ஆவது நீச்சல் வீரராகவும் அவர் திகழ்வார். ஆழிக்குமரன் ஆனந்தன் (வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்) பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த வீரர் ஆவார். ஏழு உலக சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றவர்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் நவரத்தினசாமியின் ஆசியுடன் பாக்கு நீரிணையை ஒரே தடவையில் நீந்திக் கடந்தார் ஆனந்தன். 1975 இல் மன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரைக்கும் நீந்தி அங்கிருந்து மீண்டும் மன்னாரை நோக்கி நீந்திச் சாதனை படைத்தார்.

அப்போது தினபதி சிந்தாமணியின் ஆசிரியராக இருந்த எஸ். டி. சிவநாயகம் அவருக்கு ஆழிக்குமரன் என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.

## காடழிப்புக்கு எதிராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, காடழிப்பு உட்பட சுற்றாடலுக்கு இழைக்கப்படும் தீங்குகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அதன்பின்புலத்தில் உள்ள அரசியல் கரங்களை அம்பலப்படுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஜவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, புத்திக பத்திரண, காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க உள்ளிட்டோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## காணாமல் ஆக்க ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுத் தரமுடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித் தார்.

காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவினர்களுக்கு பரிகாரம் தேடும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இரு அணிகளாகப் பிரிந்து செயற்படுகின்றனர்.

ஒருதரப்பினர் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கக் கூடாது எனவும், இன்னொரு தரப்பினர் இதற்குரிய தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் எதிர்பார்த்துள்ளனர்.

எனவே, எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்குரிய தீர்வு, ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், தங்களது உறவுகள் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனவும், பலருக்கு என்ன நடந்தது எனத் தெரியாது எனவும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே நான் முயற்சிக்கின்றேன். இதனை, தீராத பிரச்சினையாக வைத்திருக்க நான் விரும்பவில்லை. சில அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையைத் தீராத பிரச்சினையாக வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர்.

எனினும், நான் இதற்கு ஒரு தீர்வு பெற்றுக்கொடுக்கும் முகமாகவே இன்று முதற்கட்டமாக உங்களைச் சந்தித்துள்ளேன்.

எதிர்வரும் காலங்களில் உங்களை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்று உரிய தீர்வு பெற்றுத்தர முடியும் என எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## மாகாண சபைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்றால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தியாக வேண்டும் எனத் தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்தியுள்ள நிலையிலும், தேர்தலை நடத்துவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்துள்ள நிலையிலும் மாகாணசபை தேர்தல் குறித்து அரசுக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில், தேர்தல் குறித்து இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா அல்லது கைவிடப்பட வேண்டிய ஒன்றா என்பது குறித்து முதலில் ஆழமாக ஆராய்ந்து, சகல தரப்பினும் பேச்சுகளை முன்னெடுத்து அதன் பின்னர் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதற்கான செலவுகள், அவ்வாறு அதிகளவு பணத்தை விரயம் செய்வதால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இலங்கைக்கு மாகாணசபை முறைமை அவசியமில்லை என்பதே எனது கருத்தாகும். எனது இதே நிலைப்பாட்டில் அரசில் பலர் உள்ளனர்.

எனினும், அரசாக தீர்மானம் எடுக்கையில் தனித்தீர்மானம் எடுக்காது சகலரும் இணைந்து பேச்சுகளின் மூலமாக தீர்மானிக்க வேண்டும்.

மாகாண சபை முறைமை என்பது ஒரு சிலரின் அதிகார மோகத்துக்காக வேறு நாடுகளின் தலையீட்டில் எமக்குத் திணிக்கப்பட்டதாகும். நாமாக விரும்பி இதனைப் பெற்றுக்கொள்ளவில்லை.

எமது அரசமைப்பில் எமக்குப் பிடிக்காத ஒரு விடயத்தை உள்நுழைத்துக் கொண்டு இத்தனை காலமாகக் கொண்டு செல்கின்றோம். எனவே, இனியும் எமக்கு இவ்வாறான அநாவசிய சரத்துக்கள் அவசியமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது எமது நாட்டுக்குப் புதிய அரசமைப்பு ஒன்றே அவசியப்படுகின்றது. எனவே, புதிய அரசமைப்பின் பின்னர் தேர்தல் குறித்து சிந்திக்க வேண்டும். இப்போதுள்ள முறைமைக்கு அமைய அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது. முதலில் புதிய அரசமைப்பை உருவாக்கி, மாகாண சபைக்கான அதிகாரங்களை நீக்கிவிட்டு தேர்தலை நடத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் அரசில் இருந்து கொண்டே இந்த முறைமையை நாம் முழுமையாக எதிர்ப்போம் - என்றார்.

## பசறை விபத்து .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன், லுணுகலை பிரதேச சபையின் தவிசாளருடன் கலந்துரையாடி, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான பிரேதப் பெட்டிகளை வாங்கிக் கொடுக்கவும் அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

மேலும், சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கான நிதி உதவியைச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காயமடைந்தவர்களுக்கான உரிய சிகிச்சைகளை வழங்கவும், தேவையேற்படின் அவர்களை மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்புக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதாரத்துறையினருக்குச் செந்தில் தொண்டமான் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, விபத்துக்கான காரணம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊவா மாகாண போக்குவரத்துக்கு ஆணைக்குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ள அவர், விபத்துக்குள்ளான பஸ்ஸில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அதைக் கொண்டு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## பசறையில் 200 அடி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர்கள் பசறை வைத்தியசாலைக்கும், மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம், பதுளை வைத்தியசாலையில் இரத்தத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும், இரத்த தானங்களை மேற்கொள்ள பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ம.ம.முன்னணியி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்னணியின் பிரதான காரியாலய மண்டபத்தில் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுவில் மொத்தமாக 82 உறுப்பினர்கள் அங்கம் வகித்த போதிலும் 64 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கலந்துரையாடப்பட்ட, எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

01. பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அ.அரவிந்குமார் கட்சியின் கொள்கையை மீறி அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை கட்சியின் கொள்கையை மீறும் செயலாகக் கருதப்பட்டது.

02. பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமாரிடம் விளக்கம் கோரப்பட்டது. அந்த விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்ற கவுன்ஸில் தீர்மானத்தை மத்திய செயற்குழு ஏற்றுக்கொண்டது.

03. அ.அரவிந்குமார் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணி மற்றும் அங்கத்துவ உறுப்புரிமை என்பன இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் தலைமைக் காரியாலயத்துக்கு அத்துமீறி அலுவலகப் பணியில் ஈடுபட்டமை மத்திய செயற்குழு மற்றும் கவுன்ஸிலின் தீர்மானத்தை மீறியதாக மத்திய செயற்குழு தீர்மானித்தது.

04. இதன் அடிப்படையில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையிலிருந்தும் மற்றும் மலையக மக்கள் முன்னணி, மலையகத் தொழிலாளர் முன்னணியில் வகித்த பதவிகள் உடன் நடைமுறைப்படுத்தும் வகையில் நீக்கப்பட்டன எனவும் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டபோது பதுளையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற 9 உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறிய நிலையில் ஏனைய அனைவருடைய ஏகோபித்த ஆதரவுடன் மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனவும் ஊடக அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தமிழர்களின் எதிர்பார்ப்பு

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரத்தின் உச்சத் திருவிழா நாளைமறுதினம்.**

**இந்த விடயத்தில் இலங்கைத் தமிழரோடு – அவர்களின் நலனோடு – நிற்குமாறு இறுதி நேரக் கோரிக்கையை புதுடில்லிக்கு வைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ.சுமந்திரன்.**

**தமிழ் மக்களை இந்தியா கைவிடாது என்ற முழு நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாக நேற்று ‘த ஹிண்டு’ பத்திரிகையில் வெளியான பேட்டியில் தெரிவித்திருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.**

**இலங்கை தொடர்பான பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பதா, எதிர்த்து வாக்களிப்பதா, அல்லது வாக்களிப்பில் பங்குபற்றாமல் விடுவதா என்பது முற்றும் முழுதாக இந்தியாவின் – புதுடில்லியின் – தீர்மானம். ஆனால் இந்தியா இந்தத் தடவை எங்களைக் கைவிடாது என்ற அதிக நம்பிக்கை – எதிர்பார்ப்பு – தமிழர்களுக்கு உள்ளது என்று அந்தப் பேட்டியில் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றமை முற்றிலும் உண்மை.**

**அந்த நம்பிக்கையுடன்தான் இலங்கைத் தமிழர்கள் காத்திருக்கின்றார்கள்.**

**ஜெனிவாவில் இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியா தெரிவித்த கருத்துக்கள் தமிழர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தியிருக்கின்றன. இந்த விடயத்தில் தாங்கள் தனித்து இல்லை, தங்களுடன் தங்கள் அயல் தேசமான இந்தியாவும் நிற்கின்றது என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றமை மறுக்கக் கூடியதல்ல.**

**இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியத்தை, அங்குள்ள தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளோடு நேரடியாகச் சமப்படுத்தி, ஜெனிவாவுக்கான இந்தியாவின் பிரதிநிதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆற்றிய உரை தமிழர்களின் நம்பிக்கையை – எதிர்பார்ப்பை – மென்மேலும் வலுப்படுத்தியிருப்பதாக சுமந்திரன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.**

**இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் கடைசியாக நான்கு பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளன.**

**2009, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா 2014 ஆம் ஆண்டு தீர்மான விடயத்தில் மட்டும் வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டது. அதற்குப் பின்னர் இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கு இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து ஒத்துழைத்தமையால் வாக்கெடுப்பின்றியே அத் தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.**

**இலங்கை விவகாரத்தை ஒட்டிய பிரேரணைகள் மீது கடந்த காலத்தில் இந்தியா நடந்து கொண்ட முறைமையைப் பார்க்கும் போது இந்த முறையும் இந்தியா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்று தாங்கள் நம்புகின்றனர் என சுமந்திரன் எம்.பி. சுட்டிக் காட்டியிருக்கின்றார்.**

**இந்தப் பிரேரணை, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திட்டம் என்ற பெயரில் கொண்டு வரப்படுகின்றமையால் அந்தப் பெயரைக் காட்டியே அத்திட்டத்தை வரவேற்று, பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து, இந்தியா செயற்படமுடியும். தனது செயற்பாட்டை நீதியான காரணங்களைக் கூறியே இந்தியா நியாயப்படுத்தவும் முடியும்.**

**இலங்கையில் ஏற்கனவே அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி செய்யும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட காலகட்டமும் அப்போதைய உலகச் சூழல்களும் வேறானவை. இன்றுள்ள நிலைமை வேறானது.**

**எண்பதுகளின் நடுப்பகுதியில் இலங்கையில் இந்தியத் தலையீடு நிகழ்ந்தபோது இருந்த உலகச் செல்நெறி இப்போது மாறி விட்டது.**

**அந்தக் கால கட்டத்தில், பனிப்போர் காலத்தின் முடிவில், அமெரிக்காவும் இந்தியாவும் எதிரெதிர்த் திசையில் இருந்தன. இந்தியா சோவியத்தை அனுசரித்து செயற்பட்டது.**

**ஆனால் இன்று ஆடுகளம் ஒன்றானாலும் ஆட்டக்காரர்கள் மாறி விட்டார்கள். அணிகள் மாறி விட்டன.**

**இன்று இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு பக்கத்தில். அவர்களுக்கு எதிரான அல்லது முரண்பாடான சீனாவுடன் கைசேர்த்து நிற்கின்றது கொழும்பு.**

**இதுவும் கூட நமக்குச் சார்பாகக் கனிந்து வரும் சூழல்தான்.**

**இத்தகைய உலக செல்நெறிப் போக்கின் புதிய பாதையும் கூட ஜெனிவா விடயத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா நிலையெடுக்கக் கூடிய களப் புற யதார்த்தங்களை தந்து நிற்கின்றது என்று கோடி காட்டுகின்றார் சுமந்திரன்.**

**இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாக கனிந்து வரும் அனைத்துலகத் தரப்புகளின் ஈடுபாட்டை பயனுடையதாக மாற்றும் வலிமை புதுடில்லிக்கு உண்டு. அதையே தமிழர்கள் அதனிடம் எதிர்பார்த்து நிற்கின்றனர்.**

# மாகாணசபைத் தேர்தல் சட்டமூலத்தை அரசின் தேவைக்கேற்ப மாற்றமுடியாது!

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



மாகாணசபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்ட மூலத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் குறித்தவொரு குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் இவ்வாறு அரசாங்கத்தின் தேவைக்கேற்ப சட்டமூலத்தை உருவாக்குவது தவறாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்ட மூலத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. புதிய சட்ட மூலமொன்று உருவாக்கப்பட வேண்டுமாயின் முதலாவதாக நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறான சட்ட மூலமொன்றை அரசாங்கத்துக்குத் தேவையான வகையில் உருவாக்குவது தவறானதாகும். சகல கட்சிகளினதும் ஆலோசனைகள் கருத்துக்கள் கோரப்பட வேண்டும். 19 ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசாங்கத்தில் நாம் அவ்வாறு தான் உருவாக்கினோம். எனவே மாகாணசபை தொடர்பான புதிய சட்ட மூலமொன்றை உருவாக்குவதாயின் நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் அறிவிக்குமாறு கோருகின்றோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு கோரப்பட்டது. எனினும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைத்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் அறிவித்திருந்தோம். ஆனால் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க முடியாது. மறுபுறம் 13 ஆவது திருத்தத்துக்கு இணக்கம் தெரிவிக்க முடியாது என கூறுபவர்களே தற்போது தேர்தலை நடத்த ஆயத்தமாகின்றனர். தற்போதைய அரசாங்கத்திற்கு ஸ்திரமான கொள்கையோ வேலைத்திட்டமோ கிடையாது.

இதேவேளை, சீனி இறக்குமதி வரி குறைப்பினூடாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. எனவே, இனியும் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை கிடையாது. நேரடியாக வழக்கு தொடர முடியும். காரணம் மத்திய வங்கி பிணை முறி மோசடியின் போது எமது அரசாங்கத்திலேயே வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை முழுமையற்றதாகவுள்ளது. அதில் எவ்வித சாட்சிகளும் உள்ளடக்கப்படவில்லை. ஆணைக்குழுவொன்றுக்கு விசாரணைகளை முன்னெடுத்து தீர்ப்பும் வழங்க முடியாது. ஆனால் இந்த ஆணைக்குழு அவை இரண்டையும் செய்துள்ளது. முக்கிய சாட்சிகளை முன்னிலைப்படுத்தியிருந்தால் தற்போதைய அரசாங்கத்தின் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கும். – என்றார்.

# யாழ். பல்கலைப் பணியாளர்கள் எவருக்கும் தொற்று இல்லை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனைகளில் பல்கலைக்கழகப் பணியாளர்கள் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று அதிகாரிகளில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந் நிலையில், கடந்த 8 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழா மீளாய்வுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டிருந்த காரணத்தினால் அவருடன் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பலர் பல்கலைக்கழக கொவிட் 19 தடுப்பு செயலணியின் அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த 9 ஆம் திகதி முதல் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் மற்றும் தாமாக முன்வந்து எழுமாற்றுப் பரிசோதனைக்கு உடன்பட்டவர்கள் உட்பட சுமார் 55 பணியாளர்களிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அந்த மாதிரிகள் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள பி. சி. ஆர். ஆய்வு கூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வில் பணியாளர்கள் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# 150 தென்னிலங்கை படகுகளுக்கு முல்லையில் மீன்பிடிக்க அனுமதி!

முல்லைத்தீவு நாயாறு பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்களின் தொழில் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இன்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

அந்தவகையில், நாயாறு பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டுவரும் சிலாபம் கறுக்குப்பனை மீனவர்களுக்குச் சொந்தமான சுமார் 150 படகுகளுக்கு அனுமதி வழங்குவதற்கும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட மீனவர் பிரதிநிதிகளும் கருக்குப்பனை மீனவர் பிரதிநிதிகளும் இணைந்த குழு ஒன்றினை அமைத்து, அனுமதிக்கப்படாத படகுகள் மற்றும் சட்ட விரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துவது எனவும் பொது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

நாயாறுப் பிரதேசத்தில் பூர்வீகமாக தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட சுமார் 25 படகுகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் ஒப்புதலுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட படகுகளுக்கு கடற்றொழில் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் 1,000 இற்கு மேற்பட்ட படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன என மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதனால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அனுமதி பெறப்படாத படகுகள் மற்றும் சட்ட விரோத தொழில் முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவளை, கரைவலைத் தொழிலை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இன்றைய கலந்துரையாடலில், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கேரள முதல்வருக்கு எதிராகச் சதித்திட்டம்? அமுலாக்கத் துறை அதிகாரிகள் மீது வழக்கு



டொலர் கடத்தல் விவகாரத்தில் கேரள முதல்வர் பினராய் விஜயனுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாக, அமுலாக்கத் துறை அதிகாரிகளின் மீது கேரள குற்றப்பிரிவு பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரக தூதரகத்தின் பொதி மூலமாக பல நூறு கோடி ரூபா மதிப்புள்ள தங்கம் கடத்தப்பட்ட வழக்கு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த வழக்கில் தொடர்புடைய சிலருக்கு முன்னதாக டொலர் கடத்திய வழக்கிலும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக இந்திய அமுலாக்கத் துறை விசா ரணை செய்துவரும் நிலையில், சில மாதங் களுக்கு முன் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்ணான சொப்னாவின் குரல் பதிவு ஒன்று வெளியாகியது.

'டொலர் கடத்திய வழக்கில் கேரள முதல்வர் பினராய் விஜயனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூற வேண்டுமென அமுலாக்கத் துறை அதிகாரிகள் என்னைக் கட்டாயப்படுத்தினர்' என அவர் கூறியிருந்தார். இது, கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், 'டொலர் கடத்தல் வழக்கில் கேரள முதல்வர் பினராய் விஜயனை சிக்க வைப்பதற்காக அமுலாக்கத் துறை அதிகாரிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர்' எனத் தெரிவித்து, அந்த அதிகாரிகளின் மீது கேரள குற்றப்பிரிவு பொலிஸார் நேற்று வழக்குப் பதிவு செய்தனர்.

# நான்கு கோடிக்கும் அதிகமானோருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது



இந்தியாவில் நான்கு கோடிக்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், வெள்ளிக்கிழமை மாலைவரை 4,11,55,978 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை மட்டும் 18,16,161 போ தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

60 வயதுக்கு மேற்பட்டோரில் 1,53,78,622 பேருக்கும் இணை நோய்கள் உள்ள 45 முதல் 60 வயதுக்குட்பட்டோரில் 30,93,516 பேருக்கும் தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமாகி வெள்ளிக்கிழமையுடன் 63 நாள்களாகின்றன. மார்ச் முதலாம் திகதி முதல் 60 வயதுக்கு மேற்பட்டோா மற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய்கள் உள்ளோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# காஷ்மீர் முன்னாள் முதல்வருக்கு அழைப்பாணை தடை விதிக்க விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி மீது சட்டவிரோத பணப் பரிமாற்றக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைக்காக டெல்லி அலுவலகத்தில் மார்ச் 15ஆம் திகதி நேரில் சமுகமளிக்கும்படி தேசிய அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பியது.

இதற்குத் தடை விதிக்கக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் மெகபூபா வழக்குத் தொடர்ந்துள்ளார். இதனால், விசாரணைக்கு அவர் வருகை தரவில்லை. இதனால், வரும் 22 ஆம் திகதி விசாரணைக்கு சமுகமளிக்க அமலாக்கத்துறை மீண்டும் சம்மன்



அனுப்பியது.

இந்நிலையில், குறித்த வழக்கு நீதிபதி டி.என்.படேல் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, மெகபூபா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் நித்யா ராமகிருஷ்ணன், "மெகபூபா நேரில் ஆஜராக வேண்டும் என அமுலாக்கத்துறை அதிகாரிகள் நிர்பந்திக்கக்கூடாது. எவ்விதமான ஆதாரங்களும் சமர்ப்பிக்காமல் விசாரணைக்கு வருமாறு கோருவது அரசியலமைப்புச் சட்டம் 20(3) பிரிவை மீறுவதாகும், என வாதிட்டார்.

ஆயினும் நீதிபதிகள், இந்த வழக்கில் மனுதாரருக்கு எந்த விதமான சலுகையும் வழங்க முடியாது. அமுலாக்கத் துறையின் சம்மனுக்கு தடை விதிக்கவும் முடியாது'' எனத் தெரிவித்து வழக்கை வரும் ஏப்ரல் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# அகமதாபாத்தில் பிளாஸ்டிக் ஆலையில் பயங்கர தீ விபத்து



அகமதாபாத்தில் உள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது.

45 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு 150 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க பல மணி நேரம் போராடினர். ஆலையில் இருந்த அச்சு மை நிரம்பிய டிரம்கள் தீயில் வெடித்துச் சிதறின.

அருகில் இருந்த ஆலைகளுக்குத் தீ பரவாமல் இருக்க கடுமையான முன்னெச்சரிக்கை மேற்கொண்ட பின்னர் தீயை போராடி அணைத்தனர்.

இவ்விபத்தில் பெரும் பொருள்சேதம் ஏற்பட்ட போதும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# மத்திய அரசின் சட்டங்களுக்கெதிராக தீர்மானம் உரிமை இல்லையா? என உச்சநீதிமன்றம் கேள்வி

மத்திய அரசின் சட்டங்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை மாநில சட்டப் பேரவைகளுக்கு இல்லையா? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம் (சி.ஏ.ஏ), புதிய வேளாண் சட்டங்கள் ஆகியவற்றுக்கு எதிராக மத்தியில் ஆட்சியிலுள்ள பா.ஜ.கவின் கூட்டணியிலில்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் கேரளம், மேற்கு வங்கம், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலப் பேரவைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசு சாரா தொண்டு நிறுவனம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனுத் தாக்கல்செய்யப்பட்டது. அதில், அரசியல் சாசனசட்டத்தின் 7 ஆவது அட்டவணைப் படி, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வரும் விடயங்களுக்கு எதிராக மாநிலப் பேரவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளமை தவறானது. எனவே, அந்தத் தீர்மானங்களை ரத்து செய்ய வேண்டும். மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற தீர்மானங்களை நிறைவேற்றத் தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி போப்டே, நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, வி.ராமசுப்பிரமணியன் ஆகியோா அடங்கிய அமாவு முன்பு இந்த மனு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

'அப்போது, குறிப்பாக எந்த மாநில அரசு நிறைவேற்றிய எந்தத் தீர்மானத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள்?' என்று மனுதாரரிடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினா. இதற்கு மனுதாரர் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் சௌம்யா சக்கரவர்த்தி பதிலளிக்கையில், கேரள மாநில அரசு சி.ஏ.ஏ வுக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்தைச் சுட்டிக் காட்டினார்.

இதையடுத்து, 'கேரளப் பேரவையில் பெரும்பான்மை எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவர்களுடைய எதிர்க்கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளனர். இது அவர்களுடைய கருத்துத்தான். சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று தங்கள் மாநில பேரவையில் பெரும்பான்மை ஆதரவுடன் வலியுறுத்தியுள்ளனர். இப்படி எதிர்க்கருத்து தெரிவிக்கும் உரிமை கூட மாநிலப் பேரவைகளுக்குக் கிடையாது என்று மனுதாரர் கருதுகிறாரா?' என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினா. மேலும், 'மத்திய அரசின் சட்டங்களுக்கு எதிராகப் போராடுமாறு எந்த மாநில அரசும் மக்களைக் கேட்டுக் கொள்ளவில்லை. இப்படி இருக்கும்போது தீர்மானம் நிறைவேற்றும் மாநிலப் பேரவையின் உரிமையை மனுதாரா எப்படி எதிர்க்க முடியும்?' என்றும் நீதிபதிகள் வினவினா.

இதையடுத்து, 'ஏற்கெனவே சி.ஏ.ஏ.வுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 60க்கும் மேற்பட்ட மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. இந்த நேரத்தில், மாநிலப் பேரவையில் இது தொடாபாக விவாதிப்பதையும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதையும் எப்படி ஏற்க முடியும்?' என்று வழக்குரைஞர் சௌம்யா சக்கரவர்த்தி கூறினார்.

இதையடுத்து, 'சட்டப்பேரவைகளின் செயல்பாடுகள் குறித்த விதிகள் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளனவா?. இது தொடர்பான வழக்குகளின் விவரங்கள் இருந்தால் மனுதாரா அவற்றைச் சுட்டிக்காட்டி வாதிடலாம். ஆனால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் சிக்கலை ஏற்படுத்த நீதிமன்றம் இப்போது விரும்பவில்லை' என்று கூறிய நீதிபதிகள், மனு மீதான விசாரணையை நான்கு வாரங்களுக்கு ஒத்திவைத்தனா.

# கமல்ஹாசன், வானதி சீனிவாசன் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்பு!



கோவை தெற்குத் தொகுதியில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்த மக்கள் நீதி மய்ய வேட்பாளர் கமல்ஹாசன், பா.ஜ.க. வேட்பாளர் வானதி சீனிவாசன் ஆகியோரது வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான பரிசீலனை சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக முக்கிய கட்சியினர், சுயேட்சை வேட்பாளர்கள் சார்பில் 33 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை கோவை தெற்கு தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் ராஜேஷ்குமார் டோப்போ தலைமையில் நடைபெற்றது. இதில் மக்கள் நீதி மய்யக் கட்சித் தலைவர் கமல்ஹாசன், பா.ஜ.க. வேட்பாளர் வானதி சீனிவாசன், காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மயூரா ஜெயகுமார்க் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

DMI JAFFNA
A/L - 2K23
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
077 848 0604

# மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வர உதவினால் 70 ஆண்டுகால துயரம் முடிவுக்கு வரும்

## பிரதமர் மோடி

பா.ஜ.கவுக்கு ஆட்சி செய்ய 5 ஆண்டுகளை வழங்கினால், 70 ஆண்டுகளாக மேற்கு வங்க மாநிலம் சந்தித்த அழிவுகளில் இருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்கும் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

கரக்பூரில் பா.ஜ.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மோடி பேசினார். அப்போது முதலமைச்சர் மம்தா பானர்ஜி தலைமையிலான அரசை மோடி கடுமையாக விமர்சித்தார்.

தங்களுக்கு வாக்களித்தால், மேற்கு வங்க மக்களுக்களுக்காக உயிரையும் தியாகம் செய்வோம் என்றார் அவர்.

நேற்று சுமார் 50 முதல் 55 நிமிடங்கள் வாட்ஸ்ஆப், முகநூல் போன்றவை முடங்கியதால் மக்கள் கவலையில் ஆழ்ந்துவிட்டனர் என்ற மோடி, மேற்கு வங்கத்தில் வளர்ச்சியும், மக்களின் கனவுகளும் 50 முதல் 55 ஆண்டுகளாக முடங்கி உள்ளதாக கூறினார்.

# மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடுகள் பட்டியல் பின்லாந்து முதலிடம் பிடித்தது!




ஐ.நாவின் நிலையான அபிவிருத்தித் தீர்வுகள் கட்டமைப்பு (UNSDSN) என்ற அமைப்பு உலகின் மகிழ்ச்சியான நாடு எது? என்ற ஓர் ஆய்வை நடத்தியது. இணையம் மூலம் நடந்த இந்த ஆய்வின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன.

மொத்தம் 149 நாடுகள் இந்த ஆய்வில் உள்ளெடுக்கப்பட்டிருந்த நிலையில் பின்லாந்து நாட்டு மக்கள்தான் உலகிலேயே அதிக மகிழ்ச்சியாக வாழும் மக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்லாந்தைத் தொடர்ந்து நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

149 நாடுகளைக் கணக்கில் கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆய்வில் நாட்டு மக்களின் மகிழ்ச்சியான சூழல், சமூகச் சூழல், ஆதரவு, தனிநபர் சுதந்திரம், ஊழல் போன்றவை குறித்து மக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டு தரவரிசை வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களை எந்தளவுக்கு மகிழ்ச்சியாக உணர்கிறார்கள் என்பதை வைத்து இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் ஏற்பட்ட பாதிப்புகள், அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள், கொரோனா பெருந்தொற்றைத் தடுக்க ஒவ்வொரு நாட்டு அரசும் போராடி வரும் விதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு இந்த நடத்தப்பட்டது. இந்த பட்டியலில் இலங்கை 129 ஆவது, இந்தியா 139, பாகிஸ்தான் 105, பங்களாதேஷ் 101, சீனா 84 ஆவது இடங்களிலுள்ளன.

# ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்து தீக்குழம்பு ஆறு போல் ஓடுகிறது



ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்து சிதறி தீக்குழம்பு ஆறாய் வெளியேறும் வீடியோக் காட்சி இணையதளத்தில் வெளியாகி உள்ளது.

ஐஸ்லாந்து தலைநகர் ரெய்ஜாவிக் அடுத்த தீவு பகுதியில் கடந்த 4 வாரங்களில் மட்டும் 40 ஆயிரம் முறை சிறிய அளவிலான நில நடுக்கங்கள் ஏற்பட்டு உள்ளன.

இந்த நிலையில் தென் மேற்குப் பகுதியான ரெய்ஜேன்ஸ் தீவில் உள்ள எரிமலை வெடித்து சிதறியது.

தீ ஆறு போன்று தீக் குழம்பு வெளியேறும் வீடியோ காட்சியை ஐஸ்லாந்து நில அதிர்வு மற்றும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டு உள்ளது.

# மலேசியாவுடனான தூதரக உறவுகளை துண்டித்து கொண்டது வடகொரியா



அணு ஆயுத விவகாரத்தில் அமெரிக்காவுக்கும் வட கொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நீடிக்கிறது.

இந்த நிலையில் மலேசியாவில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் வட கொரியாவைச் சேர்ந்த, முன் சோல் மியோங் என்பவர் மீது பண மோசடி வழக்குப் பதிவு செய்துள்ள அமெரிக்கா அவரை தங்களிடம் ஒப்படைக்கும்படி மலேசிய அரசை கேட்டுக்கொண்டது. இதனை ஏற்று, முன் சோல் மியோங்கை அமெரிக்காவுக்கு நாடு கடத்த மலேசிய நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

இதனால் கடும் கோபமடைந்த வட கொரியா மலேசியாவுடனான தூதரக உறவை துண்டிப்பதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து வடகொரியாவின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மலேசியாவில் வசிக்கும் ஒரு வடகொரியருக்கு எதிராக அமெரிக்கா விதித்த பண மோசடி குற்றச்சாட்டுகள் அபத்தமான கட்டுக்கதை. எங்கள் அரசின் பிரதான எதிரியால் திட்டமிடப்பட்ட சதி.

அமெரிக்காவின் அழுத்தத்துக்கு அடிபணிந்து வடகொரியாவுக்கு எதிராக மிகப்பெரிய விரோத செயலை செய்த மலேசியாவுடனான தூதரக உறவுகளை முற்றிலுமாக துண்டிக்கிறோம். அமெரிக்கா இதற்கு உரிய விலை கொடுக்கும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு மலேசிய தலைநகர் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங் அன்னின் ஒன்றுவிட்ட சகோதரர் கொலை செய்யப்பட்டதில் இருந்து வட கொரியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையிலான உறவுகள் கிட்டத்தட்ட முடங்கியே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# அமீரகத்தின் மிகப்பெரிய சரக்கு கப்பல் அறிமுகம்

எம்.வி. ஹபீத் என்ற புதிய சரக்கு கப்பல் சமீபத்தில் சேவையை தொடங்குவதற்காக அபுதாபி துறைமுகத்தில் பதிவு செய்தது. இந்த கப்பல் அமீரகத்தின் மிகப்பெரிய சரக்கு கப்பல் என்ற பெருமையை பெறுகிறது. இந்த கப்பலை சபீன் என்ற குழுமம் வாங்கியுள்ளது.

அமீரகம் மற்றும் ஓமன் நாட்டின் எல்லைப் பகுதியையொட்டி மிகப் பெரிய மலை ஜெபல் ஹபீத் உள்ளது. இந்த மலையின் நினைவாக கப்பலுக்கு எம்.வி. ஹபீத் என பெயரிடப்பட்டுள்ளது.

ரோமானியா நாட்டில் உருவாக்கப்பட்ட இந்த கப்பல் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் சேவையில் இருந்து வருகிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த கப்பலை அமீரகத்தைச் சேர்ந்த நிறுவனம் வாங்கியுள்ளது. இந்த கப்பலில் அதிக அளவில் சரக்குகளை ஏற்றும் வகையில் கிரேன் அமைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த கப்பல் 254 மீட்டர் நீளமும், 49 மீற்றர் அகலமும் கொண்டது ஆகும். இந்த கப்பலில் பொருள்களை ஏற்றி இறக்கும் வகையில் 4 மிகப் பெரிய கிரேன்கள் உள்ளது. மேலும் அதிகமான அளவு பொருள்களை வைக்க 7 சரக்கு பெட்டகங்கள் வைக்கும் அறைகள் உள்ளது.

ஒரு லட்சத்து ஆயிரத்து 648 தொன் சரக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் கொள்ளளவு கொண்டது. 15 ஆயிரத்து 200 குதிரைத் திறன் கொண்ட டீசல் இன்ஜின் இதில் உள்ளன.

அபுதாபி துறைமுகத்தின் சேவைகள் மேலும் விரிவடைய இந்த புதிய கப்பல் உதவியாக இருக்கும். விரைவில் இந்த சரக்கு கப்பல் பயன்பாட்டுக்கு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சரக்கு கப்பலின் வீடியோ அபுதாபி துறைமுகத்தின் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# அவசரமாக படிக்கட்டில் ஏறியதால் தடுக்கி விழுந்தார் அதிபர் பைடன்



விமானப்படிக்கட்டுகளில் ஏறும் போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மூன்று முறை தடுக்கிய நிலையில் ஒரு முறை கீழே விழுந்தார். அவர் அடுத்தடுத்து தடுக்கி விழும் காட்சிகள் சமூக இணைய தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

அட்லாண்டாவில் மசாஜ் சென்டர் ஒன்றில் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக, அங்குள்ள ஆசிய – அமெரிக்க சமூகத்தினரிடம் பேச ஜோ பைடன் வொஷிங்டனில் இருந்து நேற்று புறப்பட்டார்.

விமானத்தின் படிக்கட்டுகளில் அவசரம் அவசரமாக அவர் ஏறியதால் 2 முறை தடுக்கியதுடன், கடைசியாக தடுக்கி விழுந்தே விட்டார். ஆனாலும் 78 வயதான பைடன் தற்போது நலமுடன் இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# செர்பியாவில் வீட்டிற்கு சென்று முதியவர்களுக்குத் தடுப்பூசி



ஐரோப்பிய நாடான செர்பியாவில், கிராமப்புறங்களில் வசிக்கும் முதியவர்களுக்கு வீட்டிற்கே சென்று மருத்துவர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி வருகின்றனர்.

செர்பியர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்த திட்டமிட்டுள்ள அந்நாட்டு அரசு, பைசரின் பயோன்டெக், ஒக்ஸ்போர்டின் அஸ்ட்ராஜெனெகா, ரஷ்யாவின் ஸ்பூட்னிக், சீனாவின் சினோபார்ம் என தாங்கள் விரும்பும் தடுப்பூசியை மக்கள் செலுத்தி கொள்ளலாம் என அறிவித்தது.

மேலும், தடுப்பூசி போட்டுக்கொள்ள நீண்ட தூரம் செல்ல முடியாத முதியவர்களுக்கு வீட்டிற்கே சென்று தடுப்பூசி போடப்படுகிறது.

# ஆவணமின்றிய தங்கம் பறிமுதல்



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் பறக்கும் படை அதிகாரிகள் நடத்திய வாகனச் சோதனையில் 5.95 கோடி ரூபா மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

கந்தர்வகோட்டையில் நடந்த சோதனையில் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட தங்கம் சிக்கியது. பறிமுதல் செய்த தங்கத்தை பறக்கும்படையினர் வருமான வரித்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டு .ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேசத்தின் முதலாவது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்





மட்டக்களப்பு,மார்ச் 20

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேசத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், இராஜாங்க அமைச்சரும், பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டு இப்பிரதேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி கிடைக்கப்பெற வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் இப்பிரதேசத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்தோடு பிரதேசத்தின் பாரிய பிரச்சினையாக கருதப்படும் மணல் அகழ்வு தொடர்பாக பேசப்பட்ட போது வேப்பவெட்டுவான் வீதியூடாக மணல் அகழ்வில் ஈடுபட்டுவருபவர்கள் குறித்த வீதியை புனரமைப்பு செய்யும் வரைக்கும் அவ்வீதியூடாக மணல் அகழ்வில் ஈடுபடக் கூடாதெனவும், குறித்த வீதி உட்பட மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களையும் பார்வையிட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கென பிரதேச செயலாளர் தலைமையில் அரசியல் பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று எதிர்வரும் 29 ஆம் திகதி பார்வையிடுவதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெட்ணம் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதித் தலைவரும் பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான ப.சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணக்கியன் உட்பட பிரதேச செயலக உயரதிகாரிகள், மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்களும் அதிகாரிகளும்பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாம் நீருக்காக போராடும் நிலை உருவாகும் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் எச்சரிக்கை



மட்டக்களப்பு,மார்ச் 20

சட்டவிரோத மண் அகழ்வுகள் தொடர்ந்தால் குடிப்பதற்கு தண்ணீரும் இருக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மாவடிஓடை அணைக்கட்டு சேவிஸ்வீதி மற்றும்வாவிச்சேனை அணுகு வீதி - கொடுவாமடு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து இருவரும் நேற்று முன்தினம் குறித்த பகுதிகளுக்கு சென்றிருந்தனர்.

இந்தநிலையில் செங்கலடி பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், மாவட்ட பொறியியலாளரை சந்திக்க பாலமடு பகுதியினைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் முயற்சித்துள்ளனர். ஆனால் அவர்களின் தொலைபேசி அழைப்புகளுக்கு பொறியியலாளர் பதிலளிப்பதில்லை. நேரில்சந்திக்க சென்றாலும் அவர்களை சந்திப்பதில்லை. அதற்கு நேரமும் ஒதுக்குவது இல்லை.

பொறியியலாளரின் தற்போதைய நடவடிக்கைகளை பார்க்கும் போதே அவர் இவ்வாறு நடந்து கொள்பவர் என்பது நன்கு தெரிகின்றது. நீங்கள் சொல்லுகின்றீர்கள் சுமார் ஆறாயிரம் பேர் வரையில் மண் அகழும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்று.

இருக்கலாம்மேசன்வேலைக்கு 1,500 ரூபாய் வழங்கினால், இதற்கு 4,000 ரூபாய் வழங்குகின்றனர். ஆனால் தற்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் மண் அனைத்தையும் எடுத்ததன் பின்னர் இரண்டு வருடங்களுக்கு பிறகு ஒருவருக்கும் ஒருவேலையும் இருக்காது. குடிப்பதற்கு தண்ணீரும் இருக்காது. பயணிப்பதற்கு வீதியும் இருக்காது. விவசாயம் செய்ய நிலம் இருக்காது.

மண்அகழ்விற்காகவழங்கப்பட்டுள்ள அனுமதி பத்திரங்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்வதனால் வேலை வாய்ப்பு இல்லாமல் போகும். ஆனாலும் மக்கள் இதனை புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன். நீங்கள் நிப்பாட்டாவிட்டாலும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்தே சட்டவிரோத மண் அகழ்விற்கு இணைத் தலைவர் வியாழேந்திரன் தடைவிதிக்கும் தீர்மானத்தினை எடுத்திருந்தார்.

## தபால் ரயில், டிப்பர் மோதியதில் விபத்து



மட்டக்களப்பு,மார்ச் 20

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கு நேற்று இரவு பயணித்த தபால் ரயில் கனேவத்த ரயில் நிலையம் அருகே திடீரென ரயில் கடவையூடாக பயணித்த டிப்பர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் டிப்பர் சாரதி படுகாயம் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .

## மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு காணி உரிமம் வழங்கும் முதல் கட்ட நிகழ்வு

மட்டக்களப்பு,மார்ச் 20

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கான காணி உரிமம் வழங்கும் முதல் கட்ட நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமலராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கான காணி உரிமத்தினை வழங்கிவைத்தார்.

அதே வேளை குறித்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி. நவரூபரஞ்சினிமுகுந்தன்கலந்து சிறப்பித்திருந்ததுடன், குறித்த நிகழ்வில்முதற்கட்டமாக 33 தமிழ் ஊடகவியலாளர்களுக்கான காணி உரிமம் வழங்கிவைக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டினை விரைவுபடுத்தி காணியினை பெற்றுக்கொடுத்தமையினை கௌரவிக்கும் முகமாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமலராஜ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன் ஆகியோர் இதன் போது ஊடகவியலாளர்களினால் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

குறித்தநிகழ்வில்மட்டக்களப்பு மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## காடழிப்புக்கு எதிரான பதாதை அகற்றல்

காடுகள் அழிப்பிற்கு எதிராக கொழும்பில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த மிகப்பெரிய பதாதையை அதிகாரிகள் நேற்று அகற்றியிருப்பதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகே, தாமரைத்தடாக மண்டபத்திற்கு முன்பாக இந்த பதாதை அமைக்கப்பட்டிருந்தது.

சுமார் 70 அடி உயரமும், 20 அடி நீளமும் கொண்டிருந்த இந்தப் பதாதைக்கு முன்பாக இன்று மாலை 4 மணிக்கு போராட்டம் ஒன்றையும் செய்வதற்கு சூழலியலாளர்கள் தயாராகி வந்தனர்.

இந்த நிலையில்தான் கொழும்பு மாநகர சபை மற்றும் பொலிஸார் இணைந்து பதாதையை அப்புறப்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# தொடரைத் தீர்மானிக்கும் போட்டி இன்று!

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடரின் ஐந்தாவதும் தொடரின் சம்பியனைத் தீர்மானிப்பதற்குமான போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் தலா இரு போட்டிகளை வென்றுள்ள நிலையில் இன்றைய போட்டி கிரிக்கெட் ரசிகர்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அஹமதாபாத்தில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

## இருபதுக்கு இருபது உலகக்கிண்ணம் தகுதிகாண் சுற்றுகள் ஒக்டோபரில்

அவுஸ்திரேலியாவில் 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இருபதுக்கு இருபது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஒக்டோபருக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தெரிவித்துள்ளது.

கொவிட் 19 தொற்றின் மூன்றாம் அலை மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கொவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாக இந்த முடிவினை எடுத்துள்ளதாக ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இருபதுக்கு இருபது உலகக்கிண்ண தொடருக்கான ஆசிய ஏ மண்டலத்திற்கான தகுதிச் சுற்று ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை குவைத்தில் நடைபெறவிருந்தது.

இதில் கட்டார், சவுதி அரேபியா, பஹ்ரைன், குவைத், மாலைதீவு ஆகிய நாட்டு அணிகள் பங்கேற்கவிருந்தன.




இந்த நாடுகளில் தற்போது கொரோனா பாதிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில் தகுதிச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இதே போன்று ஆபிரிக்க மண்டலத்திற்கான தகுதிச் சுற்று ஏ, பி என இரு குழுவாகப் பிரிக்கப்பட்டு தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் போட்டிகளும் ஒக்டோபர் மாதத்திற்கே ஒத்திவைக்கப்பட்டுள்ளன.




## இங்கிலாந்து பட்மின்டன் தொடர் அரையிறுதிக்கு முன்னேறினார் சிந்து!

பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் அனைத்து இங்கிலாந்து பட்மின்டன் சம்பியன்ஷிப் தொடரின் நேற்றைய காலிறுதிப் போட்டிகளில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெற்றிபெற்ற இந்தியாவின் பி.வி.சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்த இந்தியாவின் பி.வி.சிந்து ஐந்தாமிடத்திலிருந்த சீனாவின் அகனே யமகுச்சியை காலிறுதியில் எதிர்த்தாடினார்.

முதல் செட்டை 21 – 16 என யமகுச்சி வென்றாலும் இரண்டாவது செட்டை 21 – 16 என அதே கணக்கில் வென்று மூன்றாவது செட்டுக்கு நகர்த்தினார் சிந்து. மூன்றாவது செட்டில் இருவரும் கடுமையாக மோதினர். மாறி மாறி இருவருமே முன்னிலை பெற்று போட்டியை விறுவிறுப்பாக்கினர்.

இறுதியில் 21 – 19 என்ற கணக்கில் வென்ற சிந்து அரையிறுதிக்குள் நுழைந்தார். இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப்போட்டியில் தாய்லாந்தின் பொன்பவேயை எதிர்கொள்கிறார். இவர்களிருவரும் இதுவரை எதிரெதிராக விளையாடியுள்ள 5 சர்வதேசப் போட்டிகளில் நான்கில் சிந்து வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெக்ஸிக்கோ ஓபின் டென்னிஸ் இறுதிப்போட்டி நாளை!

மெக்ஸிக்கோ ஓபின் டென்னிஸ் போட்டியில் கிரீஸின் ஸ்டெபனோஸ் சிட்சிபஸ், அரையிறுதியில் இத்தாலியின் லோரன்ஸோ முசெட்டியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மெக்ஸிக்கோவின் அபுல்கோ நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டித் தொடரின் அரையிறுதியில் முசெட்டியை 6 – 1, 6 – 3 என்ற நேர் செட்கணில் அவர் தோற்கடித்தார்.

மற்றொரு அரையிறுதியில் ஜேர்மனியின் இரு வீரர்களான அலெக்சாண்டா ஸ்வெரேவ், டொமினிக்கோஃபா ஆகியோர் மோதினர். இப்போட்டியில் 4 : 6, 6 : 7 என்ற அடிப்



படையில் ஸ்வெரேவ் வென்றார்.

ஸ்டெபனோஸ் சிட்சிபஸ், அலெக்சாண்டா ஸ்வெரேவ் பங்குபெறும் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.




## இறுதிப்போட்டியில் இலங்கை லெஜன்ட்ஸ்!

வீதிப் பாதுகாப்பு உலகக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ்க்கு எதிரான போட்டியில் இலங்கை லெஜன்ட்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப்பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மோர்னி வான்விக் 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இலங்கையின் நுவன் குலசேகர 25 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்த இலங்கை லெஜன்ட்ஸ், உபுல் தரங்கவின் 39, சிந்தக ஜெயசிங்கவால் 25 பந்துகளில் பெறப்பட்ட 47 ஓட்டங்களின் உதவியோடு 17.2 ஓவர்களில் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இலங்கை லெஜன்ட்ஸின் நுவன் குலசேகர தெரிவானார்.

நாளை மும்பையில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்திய அணியைச் சந்திக்கிறது இலங்கை.

# கைவசமுள்ளோரை விடுவித்துவிட்டு அரசு மக்களுடன் பேவதற்கு வரட்டும்!



## அனந்தி காட்டம்

அரசாங்கம், தங்களுடைய கைவசம் இருக்கின்ற காணாமலாக்கப்பட்டவர்களை விடுவித்துவிட்டு மக்களுடன் பேசுவதற்கு வரவேண்டும் என தமிழர் சுயாட்சிக் கழகத் தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா சந்திக்கவுள்ளமை தொடர்பாக அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சனிக்கிழமை சந்திக்கவுள் ளார் என பரபரப்பான செய்தி பத்திரிகைகளில் போய்க்கொண் டிருக்கின்றது.

ஜனாதியின் பணிப்பின் பேரிலேயே, தான் இந்தச் சந் திப்பை மேற்கொள்ளவுள்ளார் என டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

யுத்தம் முடிந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்கள் சர்வதேச நீதியை நாடி நிற்கின்றனர். அத்து டன், ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற் றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அதுவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்ற நிலையில் தற்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்திக்க அரசாங்கம் விருப்பம் கொண்டிருக்கிறது.

அப்படியானால், சர்வதேச ரீதியில் நாம் நீதியைத் தேடா மல் உள்நாட்டிலே தீர்க்கக்கூடியதாக காணாமல் போனோ ரின் உறவுகளைச் சந்தித்துப் பேசுகின்றோம் என்ற ஒரு மாயையை உலகிற்குக் காட்டுவதற்கு இவர்கள் எத்த ணிப்பதாக நாங்கள் பார்க்கின்றோம்.

உண்மையில், இறுதிப் போரில் சரணடைந்தவர்களு டைய வெளியிடப்படாத பட்டியலை வெளியிடுவதாக இதே ஆட்சியாளர்கள் கடந்த ஆட்சிக்காலத்தில் தெரிவித்திருந்த மையும், பின்னர் ஒன்றுமே இல்லாத நிலையைக் கொண்டு வந்தமையையும் நாங்கள் அறிவோம்.

ஆனால், உள்ளநாட்டுப் பொறிமுறைகள் அத்தனைக்கும் தோற்றியவர்களாக நாங்கள் இருக்கின்ற போது, தற்போது திடீர் கரிசனையை அரசாங்கம் எங்கள் மீது கொள்வதன் நோக்கம் என்ன?

ஐக்கிய நாடுகள் சபையில் தங்களுக்கு எதிரான நிலைப் பாடுகளை எதிர்கொள்வதற்கு எங்களுடைய மக்களை ஒரு போலியாகச் சந்திக்கின்ற நிலைப்பாட்டை எடுக்க இருக்கின் றார்கள். அப்படிச் சந்தித்தாலும்கூட, இவர்கள் இறந்தவர்க ளுக்கானநட்டஈடுஎன்றவழியில்தான்போகப்போகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலேயே காணாமல் போனோரின் அலுவலகம் கொண்டுவந்து காணாமல்போன ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனாலும், ஒன்றைக் கூறுகின்றோம், இதே ஆட்சியாளர் களின் காலத்தில்தான் பெருமளவான மக்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். சரணடையக் கொடுத் தவர்களில் நானும் ஒருத்தியாக இருக்கின்றேன்.

இந்நிலையில், இவர்கள் உடனடியாக இந்தப் பேச்சுக ளைக் கைவிட்டு, தங்களுடைய கைவசம் இருக்கின்ற, காணாமலாக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்ட அத்தனை பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். அதன்பின் னர், மக்களுடன் பேசுவதற்கு வரட்டும். - என்று குறிப்பிட்டுள் ளார்.

# வெளிநாடுகளிலிருந்து பலர் நாடு வந்தடைவு!

கொரோனா பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கி யிருந்த ஆயிரத்து 262 இலங்கையர்கள், கடந்த 24 மணித்தியாலங்களில் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவின் சென்னையிலிருந்து 235 பேரும், டுபாயிலிருந்து 109 பேரும் இவ் வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியுள்ள இலங்கை யர்கள் அனைவரும், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து செல்லப்பட் டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று இந்த காலப்பகுதியில் வெளிநாடுகளுக்கு புறப்பட்ட 15 விமானங் களில் 655 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்றுள் ளனர்.

விமானத்தில் பயணித்தவர்களில் 110 பேர் கட்டாருக்கும், 95 பேர் ஐக்கிய அரபு எமி ரேட்ஸின் ஷார்ஜாவுக்கும் சென்றுள்ளனர்.

இந்த காலகட்டத்தில், உக்ரைன் மற்றும் இங்கிலாந்திலிருந்து 111 வெளிநாட்டு சுற் றுலாப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.



# பரசூட் பயிற்சியின் போது விபத்து: ஒருவர் சாவு; ஒருவர் படுகாயம்!


பரசூட் பயிற்சியின்போது 34 வயது டைய விமானப்படை அதிகாரியொருவர் உயிரிழந்துள்ளார் என இலங்கை விமா னப்படை உறுதிப்படுத்தியுள்ளது.

இன்று காலை 8 மணியளவில் இந்த சம்பம் இடம்பெற்றுள்ளதாகவும் 8 ஆயி ரம் அடிக்கு மேல் பரசூட்டில் இருந்து விழும் போது இந்த விபத்து இடம்பெற் றுள்ளதாக விமானப்படை குறிப்பிட் டுள்ளது.

8 ஆயிரம் அடி உயரத்தில் இரு பரசூட் வீரர்களும் சிக்கிக்கொண்டதால் விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசார ணைகளில் இருந்து தெரியவருவதா கவும் சம்பவம் தொடர்பில் விசாரணை கள் இடம்பெற்று வருகின்றன என இலங்கை விமானப்படை மேலும் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தடுப்பூசியைப் பெற இலவசமாக பதிவு செய்யலாம்!

## கொழும்பு மாநகரசபை




கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட் டோர் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக இலவசமாக தம்மை பதிவு செய்து கொள்வதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

60 வயதுக்கும் மேற்பட்டோர் எவ் வித சிக்கலும் இன்றி தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக இணைய தளத்தினூடாக தம்மைப் பதிவு செய்து கொள்ள இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

# மாகாண சபைத் தேர்தலில் இந்தியா தலையிடமுடியாது!

## இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தல் தொடர் பாக இந்தியா ஆலோசனை வழங்க வேண்டிய தேவை எமக்கு கிடையா தென இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மருதானையில் ஊடகவியலாளர் களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது விதுர விக்ரமநாயக்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மாகாண சபைத் தேர்தல் நாட்டுக்கு அவசியமற்ற ஒன்றாகவே பெரும்பா லான மக்கள் கருதுகின்றனர்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எமது நாட்டு மக்களே தீர்மா னிக்க வேண்டும். மாறாக இந்தியா விடம் ஆலோசனை பெறுவது அவசிய மற்ற ஒன்றாகும்

இதேவேளை இந்த மாகாண சபைத் தேர்தலில் பல குறைபாடுகள் காணப் படுகின்றன. - என அவர் குறிப்பிட்டுள் ளார்.

# மணல் அகழ்வுக்கு அனுமதி கோரிய வழக்கு தள்ளுபடி செய்துள்ளது மன்னார் நீதிமன்று!



மன்னார், மார்ச் 20

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்ட விரோத மணல் அகழ்வுகள் மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மணல் அனுமதிகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களாலும் பிரதேச சபை உறுப்பினர்களாலும் பல்வேறு குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அனைத்து வித மணல் அகழ்வு களுக்கும் தடை விதிக்கப்பட்டதுடன், மணல் அகழ்வு தொடர் பாக ஒழுங்கமைக்கப்பட்டதன் பின்னர் அனுமதி வழங்கு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தீர்மா னிக்கப்பட்டது.

இந்நிலையில் நானாட்டன் பிரதேச சபை உறுப்பினரும், திடீர் மரண விசாரணை அதிகாரியுமான றொஜன் ஸ்ராலின் தனக்கு வழங்கப்பட்ட மணல் அகழ்வுக்கான அனுமதி புதுப்பிக்கப்படவில்லையெனவும் அரச அதிகாரிகள் தங்கள் பணியை ஒழுங்காக மேற்கொள்ளவில்லை எனவும் கோரி மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், நானாட்டன் பிரதேச செயலாளர் மற்றும் சுரங்கம் மற்றும் அகழ்வுக்குப் பொறுப்பான அதிகாரி மீது வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில் விசாரணை இடம்பெற்றது.

இருப்பினும் குறித்த வழக்கை விசாரிப்பதற்கு நீதிவான் நீதி மன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லையெனவும் நானாட் டான் பிரதேச சபை தவிசாளர் மக்கள் பிரதிநிதி என்ற அடிப்ப டையில் அவர் அரச பணியை செய்யவில்லை என கோர முடியாது எனவும், குறித்த வழக்கு அடிப்படை அற்றது என வும் இதை மீளப்பெற்றுக் கொள்ளுமாறும் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் சார்பாக மன்றில் முன்னிலை யான சட்டத்தரணிகள் வாதத்தை முன்வைத்தனர்.

# இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்கு சினோபோர்ம் தடுப்பூசிக்கு அங்கீகாரம்!

இலங்கையில் அவசரகால பயன்பாட் டுக்கு சீனாவின் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள் ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என பதில் சுகாதார அமைச் சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள் ளார்.

இலங்கையில் இதுவரை இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிக்கும் ரஷ்யாவின் ஸ்புட் னிக்வி தடுப்பூசிக்கும் அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

இருப்பினும் தற்போதுவரை இந்தியா வின் சீரம் நிறுவன கொரோனாத் தடுப்பூசி மட்டுமே மக்கள் பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2021இல் வெளியிடப்பெற்றது.